## மேல் மாகாண சபையின் - 2014

---

மேல் மாகாண சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு, 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இவ்வறிக்கையானது மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின்படி வழங்கப்படுகின்றது. இந்த அறிக்கையில் காணப்படுகின்ற அவதானிப்புகள் தொடர்பாக மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விரிவான அறிக்கையொன்று காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மேல் மாகாண சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல்**

**(அ) மாகாண சபை நிதியக் கணக்கு**

மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதியக் கணக்கு 2015 மார்ச் 24 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) ஏனைய கணக்குகள்**

2015 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தல் நிலைமை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | |
|---|---|---|---|---|
| | | **கணக்குகளின் மொத்த எண்ணிக்கை** | **சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை** | **சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை** |
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 27 | 27 | - |
| (ii) | வருமானக் கணக்குகள் | 30 | 30 | - |
| (iii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 35 | 35 | - |
| (vi) | வணிக முற்பணக் கணக்குகள் | 02 | 02 | - |
| (v) | ஏனைய முற்பணக் கணக்குகள் | 06 | 06 | - |
| (v) | நிதியக் கணக்குகள் | 06 | 06 | - |
| (vi) | நியதிச்சட்டக் கணக்குகள் | 09 | 05 | 04 |

**2.2.2 நிதி ஏற்பாடுகளின் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் 11 தலைப்புக்களின் 17 செலவின விடயங்களின் கீழான ரூபா 15,155,843 மதிப்பீட்டு ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் 16 தலைப்புக்களின் 93 செலவின விடயங்களின் கீழான ஏற்பாடுகளிற்கு மேலாக ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த பொறுப்புக்களிற்கான கடப்பாடுகள் ரூபா 94,216,968 ஆக இருந்தது.

(இ) தலைப்பொன்றின் செலவின விடயமொன்றில் ஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளதாக காண்பித்து ஏனைய செலவின விடயங்களிற்கு ஏற்பாடு மாற்றப்பட்டிருந்த போதிலும், பின்னர் அச் செலவின விடயத்திற்கு மேலதிக ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**2.2.3 கட்டுநிதிக் கணக்குகள்**

மாகாண திறைசேரி புத்தகங்களின் படி மீளாய்வாண்டின் இறுதியளவில் தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதி மீதிகளின் மொத்தம் ரூபா 654,980,048 ஆகக் காணப்பட்டதுடன், அது ரூபா 2,112,613,501 கூட்டுத்தொகையான வரவு மீதியினையும் ரூபா 1,457,633,453 கூட்டுத்தொகையான செலவு மீதியினையும் உள்ளடக்கியிருந்தது. அதற்கமைய 05 நிறுவனங்களிற்காக வழங்கப்பட்டிருந்த கட்டுநிதி எல்லைகளை மீறி ரூபா 1,457,633,453 தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**2.2.4 தீர்ப்பனவுக் கணக்கு**

மாகாண திறைசேரி புத்தகங்களின் படி மீளாய்வாண்டின் இறுதியளவில் தீர்க்கப்படாதிருந்த தீர்ப்பனவு மீதியின் மொத்தம் ரூபா 310,982,294 ஆகக் காணப்பட்டதுடன், அது ரூபா 1,466,570,793 கூட்டுத்தொகையான வரவு மீதியினையும் ரூபா 1,155,588,499 கூட்டுத்தொகையான செலவு மீதியினையும் உள்ளடக்கியிருந்தது.

**2.2.5 பொது வைப்புக்கள்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண திறைசேரி பொது வைப்புக் கணக்கில் ரூபா 469,269,990 மீதி காணப்பட்டதுடன் நிதிப் பிரமாணம் 571 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது 02 ஆண்டுகளைக் கடந்திருந்த 14 நிறுவனங்களின் வைப்பு மீதிகள் ரூபா 13,493,790 கூட்டுத்தொகையாக காணப்பட்டது.

**2.2.6 மாகாண சபை உத்தியோகத்தர்களிற்கான முற்பணங்கள்**

18 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் நீண்டகாலமாக அறவிடப்படாது காணப்படுகின்ற மாகாண சபை உத்தியோகத்தர்களிற்கான முற்பண மீதிகளின் மொத்தம் ரூபா 198,956,843 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 78,590,977 தொகை 01 தொடக்கம் 04 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கும் ரூபா 120,365,866 தொகை 04 தொடக்கம் 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கும் உரியனவாகும்.

**2.2.7 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

அந்தந்த திணைக்களங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளிற்கும் மாகாண சபை நிதியக் கணக்கிற்கும் (மாகாண திறைசேரி புத்தகம்) இடையே பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்கு விபரம் | அந்தந்த திணைக்களக் கணக்குகளின் படி மீதி | மாகாண சபை நிதியக் கணக்கின் பிரகாரம் மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 14 கட்டு நிதிக் கணக்குகள் | 4,895,816,695 | 4,840,550,707 | 55,265,988 |
| 04 பொதுவைப்புக் கணக்குகள் | 32,876,597 | 26,496,747 | 6,379,850 |
| 06 மாகாண சபை உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் | 928,501,222 | 957,475,444 | 28,974,222 |
| 08 தீர்ப்பனவுக் கணக்குகள் | 103,488,511 | 107,636,727 | 4,148,216 |
| 02 வருமானக் கணக்குகள் | 162,103,146 | 138,971,114 | 23,132,032 |

### 2.2.8 நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிராமை

மாகாண சபையால் சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் நிலையான சொத்துக்கள் காண்பிக்கப்பட்டிராததுடன் அத்தகைய சொத்துக்களின் உள்ள தன்மை நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளிலும் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்குகளின் நடைமுறையற்ற சொத்துக்களின் அசைவு அறிக்கையின் படி, மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,701,296,058 பெறுமதியான பின்வரும் நிலையான சொத்துக்கள் மாகாண சபையிடம் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

| விபரம் | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| வாகனங்கள் - 2101 | 526,293,770 |
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் - 2102 | 396,079,234 |
| இயந்திரங்களும் இயந்திரசாதனங்களும் - 2103, 2002 | 470,313,469 |
| கட்டிடங்களும் நிர்மாணங்களும் - 2104, 2107, 2001, 2005 | 260,816,892 |
| காணிகளும் காணிகளை மேம்படுத்தலும் - 2105 | 14,680,438 |
| ஏனையவை – 2106, 2004 | 33,112,255 |
| | 1,701,296,058 |

### 2.2.9 கணக்குகளிலிருந்து விடுபாடுகள்

தனியார் பேரூந்து அதிகாரச்சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற கட்டண வருமானம் ரூபா 33,912,249 ஆகக் காணப்பட்ட போதிலும், நிதியக் கணக்கில் ரூபா 10,775,828 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 23,136,421 கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

### 2.2.10 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 10 பிரதேச செயலகங்களிற்குரிய 324 காணி குத்தகையாளர்களிடமிருந்து 10 ஆண்டுகளிற்கும் மேலாக பெறவேண்டியிருந்த குத்தகை தொகை ரூபா 2,609,528 ஆகக் காணப்பட்டது.

(ஆ) ஹொரண வலயக் கல்வி அலுவலகத்தில் 2014 திசெம்பர் 31 இல் காலாவதியான ரூபா 1,159,527 வைப்புக்கள் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்ததுடன் 2009 ஆம் ஆண்டில் ரூபா 25,000 தொகையான புலமைப்பரிசில் நிதியினை குறித்த மாணவர்களிற்குச் செலுத்தாது பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) மதுகம வலயக் கல்வி அலுவலகத்தில் 2011 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வருகின்ற ரூபா 206,741 பிடிகாசு மற்றும் கேள்விப்பண வைப்புக்கள் விடுவிக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

**2.2.44 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

**பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

மாகாண சபையின் பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கு மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட 11 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2015 யூன் 30 ஆந் திகதி வரை பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.12 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் | மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிற்குரிய உழைக்கும் போதே செலுத்தும் வரியினை கணிப்பிடுகையில் வரிக்கு உட்படுகின்ற கொள்வனவுகள், செயற்திட்டங்கள் போன்ற வருமானங்களை உள்ளடக்காது வரி கணிப்பிடப் பட்டிருந்தமையால் ரூபா 554,209 குறைவாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2008 இன் 01 ஆம் இலக்க சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் 05 ஆம் பிரிவு | சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்று பதிவுசெய்யப்பட்டதன் பின்னர் 03 ஆண்டுகளைத் தாண்டிய பின்னர் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்ட பின்னரே பதிவை புதுப்பிக்க வேண்டிய போதிலும், 40 சிறுவர் இல்லங்கள் பதிவை புதுப்பிக்க வேண்டிய திகதி முடிவுற்று ஓராண்டுக்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அவற்றின் பதிவை புதுப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நிதிப்பிரமாணம் 571 | வதிவிட வாடகையின் கீழ் 1991 முதல் 2011 வரை 106 வைப்பாளர்களினால் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 4,230,834 இலிருந்து வழக்கு நடவடிக்கைகள் முடிவுற்றிருந்த வைப்புக்களை ஆய்ந்தறிந்து அவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | தாபன விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 09 மற்றும் 10 ஆம் பிரிவுகள் | மாதத்திற்கு நாளொன்றுக்கு மேல் விடுமுறை தின கடமை படியினை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீகாரமின்றி 2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 47 உத்தியோகத்தர்களிற்கு விடுமுறை தின சம்பளமாக ரூபா 663,653 செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 2008 யூன் 26 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 13/2008 ஆம் இலக்க 04 ஆம் பந்தி | உத்தியோகபூர்வ வாகனங்கள் இணைப்புச் செய்யப்பட்டுள்ள உயர் மட்ட உத்தியோகத்தர்கள் குழாம் வாகனங்களை பயன்படுத்தியிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| (ஊ) | 2010 செப்தெம்பர் 01 ஆந் திகதிய 446 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தொலைபேசி படிக்கு உரித்தற்ற 39 உத்தியோகத்தர்களின் சார்பில் முறையான அங்கீகாத்தைப் பெற்றுக்கொள்ளாது 2012 மற்றும் 2013 ஆண்டுகளிற்காக ரூபா 663,653 தொலைபேசி படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (எ) | 1975 நவம்பர் 05 ஆந் திகதிய 57/75 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | இரண்டாந் தரத்திற்காக மாதத்திற்கு ரூபா 5 வீதமும் ஆரம்ப தரத்திற்காக மாதத்திற்கு ரூபா 3 வீதமும் வசதிக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், ஹொரண தொன் பெட்ரிக் வித்தியாலயத்தினால் பல வருடங்களாக 1 ஆண்டு முதல் 13 ஆண்டு வரையிலுமான சகல மாணவர்களிடமிருந்தும்மாதத்திற்கு ரூபா 5 வீதம் வசதிக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. |
| (ஏ) | ஆசிரியர் எண்ணிக்கையினை நிர்ணயித்தல் தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட 2003 நவம்பர் 07 ஆந் திகதிய 2003/38 ஆம் இலக்க சுற்றறிக்கை | (i) ஹாரண தொன் பெட்ரிக் வித்தியாலயத்தின் மாணவர்களின் எண்ணிக்கைக்கு அமைய இரண்டு மேற்பார்வை ஆசிரியர்கள் மற்றும் 25 ஆசிரியர்கள் மிகையாகக் காணப்பட்டனர்.<br><br>(ii) சுற்றறிக்கையின் 2.1.3 ஆம் பந்தியிலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் பாடங்களை கற்பிப்பதில் ஈடுபட்டுள்ள ஆசிரியர் ஒருவர் வாரத்திற்கு சராசரியாக 40 வினாடிகளைக் கொண்ட 35 பாடவேளைகளிலும் அத்துடன் வகுப்புக்கு பொறுப்பாக செயற்படுகின்ற ஆசரியர் ஒருவர் 33 பாடவேளைகளிலும், உயர் தர கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர் ஒருவர் வாரத்திற்கு குறைந்தது 30 பாடவேளைகளிலும் கற்பித்தல் நடவடிக்கை களில் ஈடுபடுதல் வேண்டும். இருப்பினும் ஹாரண தொன் பெட்ரிக் வித்தியாலயத்தின் ஆசிரியர் பாட அட்டவணையில் காலத்தினைத் தீர்மானிக்கையில் நூலக கால அளவு உள்ளடக்கப்பட்டிருந்தமையால் அதற்கமைய 14 ஆசிரியர்களிற்கு வாரமொன்றுக்கு 81 பாடவேளைகள் நூலக நடவடிக்கைகளிற்காக |

ஒதுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| | |
|---|---|
| (ஐ) மேல் மாகாண நிதி ஒழுங்குவிதி 54 | (i) மாகாண சுகாதார திணைக்களத்தில் அறவிடுவதற்கு, பதிவழிப்பதற்கு அல்லது கைவிடுவதற்கு உள்ள 03 ஆண்டுகளிற்கு குறைவான ரூபா 6,458,290 பெறுமதியான 37 சேத நட்டச் சம்பவங்கள், 5-10 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட ரூபா 2,653,655 பெறுமதியான 31 சேத நட்டச் சம்பவங்கள் மற்றும் 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 4,743,843 பெறுமதியான 69 சேத நட்டச் சம்பவங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை 2008 இலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை ரூபா 6,789,182 நட்டம் ஏற்பட்டிருந்த 92 வாகன விபத்துக்கள் தொடர்பில் ஆரம்ப விசாரணை அறிக்கையினை சமர்ப்பித்திருக்கவில்லை. |

## 3. வருமானம் மற்றும் செலவின முகாமைத்துவம்

### 3.1 வருமானம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான முரண்களுடனான பொழிப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2014 | | | 2013 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு செய்யப்பட்டவை | உள்ளபடியானது | முரண் | பாதீடு செய்யப்பட்டவை | உள்ளபடியானது | முரண் |
| மாகாண சபை விடயங்களுக்குரிய வருமானம் | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வரி வருமானம் | 28,284,973,000 | 28,112,652,917 | 172,320,083 | 27,302,025,000 | 22,262,325,180 | 5,039,699,820 |
| வரி அல்லாத வருமானம் | 2,992,291,000 | 2,979,181,771 | 13,109,229 | 2,815,230,000 | 3,259,241,399 | (444,011,399) |
| அரசாங்க மானியம் | 14,526,099,000 | 13,306,497,120 | 1,219,601,880 | 11,490,501,000 | 11,367,755,000 | 122,746,000 |
| மொத்தம் | **45,803,363,000** | **44,398,331,808** | **1,405,031,192** | **41,607,756,000** | **36,889,321,579** | **4,718,434,421** |

### 3.2 செலவினம்

| செலவினம் | 2014 பாதீடு செய்யப்பட்டவை ரூபா | 2014 உள்ளபடியானது ரூபா | 2014 முரண் ரூபா | 2013 பாதீடு செய்யப்பட்டவை ரூபா | 2013 உள்ளபடியானது ரூபா | 2013 முரண் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனம் | 25,341,691,399 | 25,119,406,935 | 222,284,464 | 22,832,178,812 | 22,220,542,279 | 611,636,533 |
| ஏனையவை | 13,682,034,201 | 13,462,640,733 | 219,393,468 | 12,583,219,117 | 12,212,444,426 | 370,774,691 |
| மீண்டெழும் | 39,023,725,600 | 38,582,047,668 | 441,677,932 | 35,415,397,929 | 34,432,986,705 | 982,411,224 |
| மூலதனம் | 6,779,637,400 | 5,863,476,034 | 916,161,366 | 6,192,358,071 | 5,054,877,130 | 1,137,480,941 |
| மொத்தம் | 45,803,363,000 | 44,445,523,702 | 1,357,839,298 | 41,607,756,000 | 39,487,863,835 | 2,119,982,165 |

மீளாய்வாண்டின் மீண்டுவருஞ் செலவினத்தினதும் மூலதனச் செலவினதும் விகிதாசாரம் 7 : 1 ஆக இருந்தது.

### 3.3 நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் இறுதியிலும் அண்மித்த முன்னைய ஆண்டுகள் இரண்டினதும் இறுதியிலான நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| | திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2014 ரூபா | 2013 ரூபா | 2012 ரூபா |
|---|---|---|---|
| வரி வருமானம் | 1,149,785,270 | 769,607,586 | 1,138,048,276 |
| வரியல்லாத வருமானம் | 5,162,163,276 | 764,074,279 | 394,127,295 |
| மொத்தம் | 6,311,948,546 | 1,533,681,865 | 1,532,175,571 |

## 4. நிதி மீளாய்வு

### 4.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் பற்றாக்குறை ரூபா 2,598,542,256 ஆகக் காணப்பட்டதுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,029,280,733 ஆகக் காணப்பட்டது.

### 4.2 சட்டரீதியான சம்பவங்கள்

மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு எதிராக அதிகாரசபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

(அ) வீதிகளை அபிவிருத்தி செய்கையில் தனியார் ஆதனங்களுக்கு நட்டங்கள் ஏற்பட்டமை மற்றும் தனியார் ஆதனங்களை சட்டவிரோதமாக கையேற்றமை காரணமாக ரூபா 4,907,875 மொத்தமான இழப்பீட்டைக் கோரி 05 வெளிவாரி நபர்களால் அதிகாரசபைக்கு எதிராக நீதி மன்றங்களில் 05 வழங்குகள் தொடரப்பட்டிருந்தன. அதில் ஒரு வழக்கில் குறித்துரைக்கப்பட்ட இழப்பீடு கோரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்த உடன்படிக்கைகளை இரத்துச் செய்தமை மற்றும் உடன்படிக்கை நிபந்தனைகளை மீறியமை காரணமாக ரூபா 99,457,658 இழப்பீடு கோரி 02 வெளிவாரி நிறுவனங்களினால் அதிகாரசபைக்கு எதிராக நீதி மன்றங்களில் 02 வழங்குகள் தொடரப்பட்டிருந்தன.

(இ) அதிகாரசபையின் சாரதி ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட வாகன விபத்து காரணமாக காலை இழந்த வெளி நபரொருவர் ரூபா 350,000 இழப்பீடு கோரி அதிகாரசபைக்கு எதிராக நீதி மன்றத்தில் வழங்குத் தொடரப்பட்டிருந்தது.

(ஈ) சேவையிலிருந்த ஊழியர் ஒருவர் பதவி நீக்கம் செய்யப்பட்டமை காரணமாக அந்த ஊழியர் அதிகாரசபையிடமிருந்து இழப்பீட்டினையும் மீண்டும் சேவையில் அமர்த்துமாரும் கோரி தொழில் நியாயச் சபையில் தொடந்திருந்த வழக்கில் ஊழியருக்கு ரூபா 570,140 செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

(உ) அதிகாரசபையின் முன்னாள் கணக்காளர் ஒருவரினால் சேவையில் ஈடுபட்டிருந்த காலத்தில் பெற்றுக்கொண்டிருந்த ரூபா 479,819 வாகனக் கடன் மற்றும் அதற்காக நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 69,917 வட்டித் தொகை என்வற்றின் கூட்டுத்தொகையான ரூபா 549,736 செலுத்தப்படாதிருந்தமை காரணமாக அதிகாரசபையினால் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது.

## 5. செயற்பாட்டு மீளாய்வு

### 5.1 செயலாற்றல்

#### 5.1.1 அரசாங்க மானியம்

மாகாண சபை அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக கிடைத்த ஏற்பாடு மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | மூலம் | கிடைத்த ஏற்பாடு | செலவினம் | குறை/ (மிகை) பயன்பாடு |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | கருதுகோள் அடிப்படை மானியம் | 292,500,000 | 803,195,544 | (510,695,544) |
| (ii) | மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியம் | 508,000,000 | 1,112,290,996 | (604,290,996) |
| (iii) | தோட்டப் பாடசாலைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 25,000,000 | 23,248,339 | 1,751,661 |
| (iv) | 1000 இரண்டாம் நிலை பாடசாலைகள் நிகழ்ச்சித்திட்டம் | 65,000,000 | 60,592,282 | 4,407,718 |
| (v) | ஏனைய மானியம்<br>உலக வங்கி உதவி - கல்வி | 236,684,120 | 335,185,948 | (98,501,828) |
| | - சுகாதாரம் | 180,000,000 | 154,671,552 | 25,328,448 |
| | புதிய அலுவலக தொகுதி | 300,000,000 | 1,080,987,461 | (780,987,461) |
| | | 1,607,184,120 | 3,570,172,122 | (1,962,988,002) |

### 5.1.2 மாகாண அபிவிருத்தித் திட்டம்

மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய வேலைகள் மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளின் கீழ் ரூபா 5,248 மில்லியன் பெறுமதியான மதிப்பீட்டுப் பெறுமதியில் 10,830 வேலைத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையின் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்படுகின்றன.

| | | புதிய வேலைகள் | தொடர்ச்சியான வேலைகள் | மொத்த வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|
| (அ) | முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டவை | 6,289 | 73 | 6,362 | 4,015 |
| (ஆ) | 50% இனை விடக் குறைவாக பூர்த்தி செய்யப்பட்டவை | 183 | - | 183 | 130 |
| (இ) | 50% இற்கு மேல் பூர்த்தி செய்யப்பட்டவை | 130 | - | 130 | 253 |
| (ஈ) | ஆரம்பிக்கப்படாதவை | 616 | 02 | 618 | 450 |
| (உ) | | 42 | - | 42 | 17 |
| | மொத்தம் | 7,260 | 75 | 7,335 | 4,865 |

### 5.1.3 பரீட்சைப் பெறுபேறுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) களனிய கல்வி வலயத்திலுள்ள மாகாண சபை பாடசாலைகளில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைதல் சதவீதம் 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே 10.03 சதவீதம், 10 சதவீதம் மற்றும் 8.9 சதவீதமாகக் காணப்பட்டன.

(ஆ) களனிய கல்வி வலயத்திலுள்ள கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர) வகுப்புக்கள் இடம்பெறுகின்ற 83 பாடசாலைகளில் 25 பாடசாலைகளின் பரீட்சைகளில் சித்தியடைதல் சதவீதம் 50 சதவீதமாகவும் 58 பாடசாலைகளில் அச் சதவீதம் 30 சதவீதமாகவும் காணப்பட்டன.

(இ) கம்பஹ கல்வி வலயத்திலுள்ள 06 மாகாண சபை பாடசாலைகளிலிருந்து 2012 ஆம் ஆண்டின் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர) பரீட்சைக்குத் தோற்றிய 43 மாணவர்களும் சித்தியடையாதிருந்ததுடன் 07 மாகாண சபை பாடசாலைகளிலிருந்து 2013 ஆம் ஆண்டின் மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய 83 மாணவர்களும் சித்தியடைந்திருக்கவில்லை.

(ஈ) நீர்கொழும்பு கல்வி வலயத்திலுள்ள மூன்று பிரிவுகளின் மாகாண சபை பாடசாலைகளின் 2013 ஆம் ஆண்டின் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைதல் சதவீதம் 3 முதல் 7 சதவீதம் வரையாகக் காணப்பட்டது.

### 5.2 முகாமைத்துவத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பஹ கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் 2013 ஆம் ஆண்டில் ஆரம்ப பிரிவுகளில் கல்வி கற்றுவருகின்ற 3,314 மாணவர்கள் சிகிச்சைக் கற்கை தேவையுள்ள மற்றும் மெதுவாக கற்றுக்கொள்ளும் மாணவர்கள் என்பது இனங்காணப்பட்டிருந்த போதிலும், அவர்களிற்காக சிகிச்சைக் கற்றல் நிகழ்ச்சித்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இருதய நோயாளர்களின் பரிசோதனையினை மேற்கொள்வதற்காக EX-ECG உபகரணமொன்று கம்பஹ பொது வைத்தியசாலையில் காணப்பட்ட போதிலும், அந்த உபகரணத்தை செயற்படுத்துவதற்கு பதவியணியினர் இல்லாமை காரணமாக குறித்த பரிசோதனையினை வெளியில் செய்துகொள்வதற்கு நோயாளர்களிற்கு ஏற்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் களனிய கல்வி வலயத்திலுள்ள மாகாண சபை பாடசாலைகளில் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த ரூபா 4,100,000 தொகைக்கான 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் என்ற ஆரம்பப்பிரிவு மாணவர் அடிப்படை செயற்திட்டம் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாகாண வருமானச் சேவைகள் யாப்பியல் கோவையின் 7.3 ஆம் பிரிவின் படி நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகளிற்குள் மூன்றுக்கு மேற்படாத அமர்வுகளில் வருமான மதிப்பீட்டாளர்கள் தமது தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய போதிலும், 2014 யூலை 07 ஆந் திகதியில் முடிவடைந்த நான்கு ஆண்டுகளில் ஒரு தடவை மாத்திரம் பரீட்சை நடாத்தப்பட்டிருந்தமையால் வருமான மதிப்பீட்டாளர் பதவிக்கு 2010 யூலை 07 ஆந் திகதி பதவியுயர்த்தப்பட்ட 14 உத்தியோகத்தர்களில் 12 பேருக்கு சம்பள உயர்வுகளையும் சேவையில் உறுதிப்படுத்தலையும் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(உ) 1980 சனவரி 16 ஆந் திகதி விவசாய செயற்திட்ட உத்தியோகத்தர் ஒருவராக நியமனம் பெற்று 2013 மே 18 ஆந் திகதி கால்நடை அபிவிருத்தி ஆலோசகராக ஓய்வுபெறுவதற்கிருந்த உத்தியோகத்தர் ஒருவரின் சேவை நிரந்தரமாக்கப் படாதிருந்தமையால் ஓய்வூதிய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் இந்த உத்தியோகத்தரின் தனிப்பட்ட கோவையில் கல்விச் சான்றிதழ்கள் எதுவும் காணப்படவில்லை.

(ஊ) ஜயவர்தனபுர வலயத்திலுள்ள ஸ்ரீ ராஹுல மகளிர் கல்லூரிக்கு 2013 ஆம் ஆண்டிற்காக சில பாடங்களிற்கு ஒரு தடவை மாத்திரமே ஆசிரியர் ஆலோசகரின் சேவை கிடைத்திருந்ததுடன் கணிதம் மற்றும் சிங்களம் ஆகிய பாடங்களிற்காக இரண்டு நாட்களிற்கு மாத்திரமே கிடைத்திருந்தது. அத்துடன், விஞ்ஞானம், சமூகக் கல்வி மற்றும் வணிகக் கல்வி ஆகிய பாடங்களிற்காக ஆசிரிய ஆலோசகர்களின் சேவை கிடைக்காதிருந்தமையால் பாடசாலையில் பாடங்களின் அபிவிருத்திக்காக ஆசிரிய ஆலோசகர்களின் பங்களிப்பு மிகவும் அருமையானதாகக் காணப்பட்டது.

(எ) மாகாண பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற 09 அதிபர்கள் 2013 ஆம் ஆண்டில் மாகாண கல்வித் திணைக்களத்திற்கு அவ்வப்போது இணைப்புச் செய்யப்பட்டு கடமைகள் ஒப்படைக்கப்படாமை காரணமாக அக் காலத்தில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 971,000 சம்பளம் பயனற்ற செலவினமாகியிருந்தது.

(ஏ) 2012 இன் 04 ஆம் இலக்க மேல் மாகாண காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தின் 33(1) ஆம் பிரிவின் பிரகாரம் மேல் மாகாண சபையினால் காணிகள் ஆலோசனைச் சபையொன்று தாபிக்கப்பட்ட வேண்டுமென்பதுடன் அந்த ஆலேசனைச் சபை மாகாணத்தில் அமைந்துள்ள மாகாண சபைக்குரிய காணிகளின் பயன்பாடு குறித்த மாகாணக் கொள்கையினைத் தயாரிப்பதற்கு பொறுப்புடையதாக இருக்க வேண்டிய போதிலும், அச் சபை 2014 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2007 மார்ச் 16 ஆந் திகதிய 1488/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் படி நிரந்தர பயணிகள் வீதிப் போக்குவரத்திற்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்காக பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படுகின்ற குறைந்த விலைகளைக் குறிப்பிட்டு பகிரங்க கேள்வி கோரல்கள் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கூறு விலைகளிடையே உயர்வான விலையினை அடிப்படையாகக் கொண்டே போக்குவரத்தில் ஈடுபடுவோர் தெரிவுசெய்யப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டில் கேள்வி கோரப்படாது குறைந்த விலையினை அடிப்படையாகக் கொண்டு முப்பது வாகனங்களிற்கு நிரந்தர வீதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஒ) பயணிகள் வீதிப் போக்குவரத்து அதிகாரசபையினால் லொக் பத்திரக் கட்டணம் மற்றும் நுழைவுக் கட்டணம் என்பன 2013 மார்ச் 26 மற்றும் நவம்பர் 01 ஆந் திகதிகளில் அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் கையேற்கப்பட்டிருந்த பெஸ்தியன் மாவத்தையிலுள்ள பேரூந்து தரிப்பிடத்தில் அக் கட்டணங்கள் அறவிடப்படாமை காரணமாக மீளாய்வாண்டில் லொக் பத்திர வருமானம் ரூபா 1,308,600 இனாலும் நுழைவுக் கட்டண வருமானம் ரூபா 7,692,750 இனாலும் குறைவடைந்திருந்தன.

(ஓ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கடமைப் பணிகளை நிறைவேற்றுவற்காக பெஸ்தியன் மாவத்தையிலுள்ள பேரூந்து தரிப்பிடத்தில் கடமையாற்றிய பயணிகள் வீதிப் போக்குவரத்து அதிகாரசபையின் ஐம்பத்தியொரு ஊழியர்களிற்கான சம்பளம், வேதனம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளிற்காக ரூபா 15,430,547 பயணிகள் வீதிப் போக்குவரத்து அதிகாரசபையினால் செலவிடப்பட்டிருந்த போதிலும், அத் தொகையினை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிட்மிருந்து மீள் நிரப்பல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஔ) ஹோமாகம பேரூந்து தரிப்பிடத்தில் பேரூந்து பிரயாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட 2012 திசெம்பர் 10 ஆந் திகதியன்றே பேரூந்து தரிப்பிடம் நிலத்தின் கீழ் இறங்குண்டமையால் பேரூந்து பிரயாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 52,759,629 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ஹோமாகம பேரூந்து தரிப்பிடம் திறந்து வைக்கப்பட்டு ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், பேரூந்துகளை நிறுத்தி வைப்பதற்கு ஏற்ற நிலைக்கு மாற்றுவதற்கு பயணிகள் வீதிப் போக்குவரத்து அதிகாரசபைக்கு இயலாதிருந்தது.

(ஔ) மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இரண்டு முன்னாள் தலைவர்களிற்கு 2005 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 432,030 தொகையான எரிபொருள் படி மற்றும் தொலைபேசி கட்டணம் என்பவற்றை மீள அறவிடுவதற்கு மேல் மாகாண அரசாங்க கணக்குகள் குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரையின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக அப் பெறுமதியை கணக்குப் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஃ) மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் ஊழியர் கடன்களை வழங்குகையில் மற்றும் அக் கடன்களை அறவிடுகையில் சுழற்சி நிதியமொன்றின் மூலம் மேற்கொள்ளப்படாது, வங்கியில் வைப்புச்செய்யப்பட்டிருந்த வைப்புலிருந்து வீடமைப்புக் கடன்களை செலுத்துதல் மற்றும் பொது நிதியத்திலிருந்து ஏனைய கடன்களைச் செலுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இவ்வாறு முறையற்ற விதத்தில் 2013 ஆம் ஆண்டினுள் செலுத்தப்பட்டிருந்த ஊழியர் கடன் ரூபா 75,373,389 ஆகும்.

### 5.3 செயற்பாட்டு திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாணத்திலுள்ள 55 கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குப் புத்தகங்கள் பூரணத்துவமற்றுக் காணப்பட்டமையால் ஏறத்தாழ 11 ஆண்டு காலமாக அச் சங்கங்களின் கணக்குகள் கூட்டுறவு ஆணையாளரின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண காணி திணைக்களத்தினால் நீண்டகால வரி அடிப்படையில் தனியார் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டிருந்த 09 காணிகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியளவில் பெறப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 41,597,047 ஆகும்.

### 5.4 சர்ச்சைக்குரிய விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க கொள்கையொன்றாக சகல அரசாங்க ஊழியர்களிற்கும் செயற்படுத்தப்படுகின்ற 'அக்ரஹாரா'' காப்புறுதித் திட்டம் காணப்படுகையில் ஆளுனரின் அங்கீகாரத்தின் மீது மேல் மாகாணத்தின் எல்லா அரசாங்க சேவை உத்தியோகத்தர்களிற்குமாக ''சுபசன் குரு பவுர'' என்ற பெயரில் கூட்டு ஆயள் காப்புறுதி திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததுடன், இதன் முதல் கட்டமாக மாகாணப் பாடசாலைகள், மற்றும் கல்வி அலுவலகங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள 5,225 அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களிற்காக ஒரு நபருக்கான ஆண்டு பங்களிப்புத் தொகையென ரூபா 900 வீதம் ரூபா 4,702,500 இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்துவைக்கும் நடவடிக்கைகளிற்காகவும் அறிவுறுத்துவதற்காகவும் ரூபா 156,620 மேலதிக செலவும் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையிடம் காணப்பட்ட பெஸ்தியன் மாவத்தை கழிவறை முறைமை அதிகாரசபையின் இணக்கப்பாடின்றி தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 2010 ஒக்தோபர் மாதம் கூறு விலைகள் கோரப்பட்டு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை அக் கழிவறை முறைமையினை வாடகைக்கு வழங்கியமையால் மாதமொன்றுக்கு ரூபா 475,000 தொகையினை உழைத்திருந்த போதிலும், 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டின் இறுதி வரை அதன் மூலம் அதிகாரசபைக்கு இழக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 18,050,000 ஆகும்.

(இ) மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் தற்போது வாகன நிறுத்துமிடமாக பயன்படுத்தப்பட்டு வரப்படுகின்ற தனியார் நிறுவனமொன்றுக்குச் சொந்தமான 32.4 பர்ச் விஸ்தீரணம் கொண்ட காணி மாகாண அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது அதிகாரசபையின் அலுவலகத்தை விஸ்தரிப்பதற்கும் வாகன தரிப்பிடத்தை நிர்மாணிப்பதற்கும் கொள்வனவு செய்வதற்காக பிரேரிக்கப்பட்டு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ரூபா 146 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 50 சதவீத முற்பணத் தொகையைச் செலுத்துவதற்காக அதிகாரசபையினால் குறித்த கம்பனியுடன் எழுத்திலான இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவுசெய்தல் அதிகாரச்சட்டத்தின் மூலம் கையேற்கப்பட்டிருந்த அதிகாரங்களிற்கு பங்கமேற்படாத விதத்தில் பணிப்புரைகள் தயாரிக்கப்பட வேண்டுமென்பதுடன் பணிப்புரைகள் தயாரிக்கப்பட வேண்டிய 09 காரணங்கள் இவ் அதிகாரச்சட்டத்தின் 18(2) ஆம் பிரிவினால் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இருப்பினும், அக் காரணங்களில்

உள்ளடங்காத, இவ் அதிகாரச்சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் படி ஒவ்வொரு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினதும் வருமானச் சேகரிப்பு அதிகாரத்திற்கு இணக்கமுறாத வகையில் 2007 மார்ச் 22 ஆந் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின், மாகாண சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் தனியார் சுகாதார சேவைகள் கண்காணிப்புச் சபைக்கு உரித்தாகும் விதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், மேற்படி வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிற்காக தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவுசெய்தல் கட்டணமாக மாகாண சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 4,689,500 அறவிடப்பட்டிருக்கவில்லை.

**5.5 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபையின் முறையான மதிப்பீட்டு அறிக்கையும் தரப் பரிசோதனை அறிக்கையும் இன்றி பயன்படுத்தப்பட்ட இரண்டாவதாக கொள்வனவு செய்யப்பட்ட டோசர் இயந்திரமொன்று ரூபா 5 மில்லியன் செலுத்தப்பட்டு உள்ளூராட்சி நிறுவனமொன்றிடமிருந்து பெறப்பட்டிருந்ததுடன் இவ் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு 1,454 மணித்தியாலங்கள் செயற்படுத்தப்பட்ட பின்னர் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

(ஆ) மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் ரூபா 246 மில்லியன் செலவிடப்பட்டு 2012 ஆம் ஆண்டில் பன்னல மற்றும் வகவத்த ஆகிய இடங்களில் 2 அஸ்பலற் இயந்திர நிலையங்கள் தாபிக்கப்பட்டிருந்ததுடன் தாபிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை விளைவற்றிருந்த காலப்பகுதி பன்னல மற்றும் வகவத்த ஆகிய இடங்களில் முறையே 306 மற்றும் 235 நாட்களாகும். இதற்காக மாதாந்தம் செய்யப்பட வேண்டிய மேந்தலைச் செலவினம் ஏறத்தாழ ரூபா 03 மில்லியனாக காணப்பட்டமையால் விளைவற்ற காலப்பகுதிக்காக செய்யப்பட்ட ரூபா 51 மில்லியன் செலவினம் சிக்கனமற்ற செலவினமாக காணப்பட்டது.

**5.6 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையின் சுத்திகரிப்பு நடவடிக்கைகளிற்காக 2013 யூன் 30 ஆந் திகதி வரை தெரிவுசெய்யப்பட்டிருந்த ஒப்பந்தக்காரரின் சேவை திருப்திகரமாக காணப்படவில்லை என மருத்துவ அத்தியட்சகரினால் 2013 யூன் மாதத்தில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த ஒப்பந்தக் காரரின் சேவையினை மீண்டுமொரு முறை 2013/2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 17,455,357 பெறுமதிக்குப் பெற்றுக்கொள்வதற்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தார்.

(ஆ) ஆளுனரின் அலுவலகத்திற்காக பொருத்தமான கட்டிடமொன்றை வாடகைக்கு பெற்றுக்கொள்கையில் 08 ஆம் இலக்க தேசிய கொள்வனவு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய நாட்கள் கால அவகாசத்தை வழங்காது போட்டிமிக்க கூறுவிலைகளைக் கோருகையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒரேயொரு கூறு விலையும், கட்டிடத்தின் உரிமையினை உறுதிப்படுத்த முடியாதிருந்தமை காரணமாக நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் செய்திப்பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்த விளம்பரத்தின் அடிப்படையில் முறையற்ற விதத்தில் பின்னர் தெரிவு செய்யப்பட்டிருந்த கட்டிடம் தேவையான நியதிகளுடன் இணங்கியிருக்கவில்லை.

(இ) மாகாண விவசாய அமைச்சின் ஆலோசனைச் சபை அங்கத்தவர்கள் 2013 பெப்ரவரி 28 முதல் மார்ச் 05 வரை எகிப்து நாட்டில் சுற்றுப்பயணம்

மேற்கொண்டிருந்ததுடன் அவர்களது குடும்பங்களின் 06 உறுப்பினர்களிற்காக மாகாண சபை நிதியிலிருந்து ரூபா 426,676 செலவிடப்பட்டிருந்தது. அத்துடன், சுற்றுப்பயணத்தில் கலந்து கொண்டிருந்த அங்கத்தவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் தங்குமிட மற்றும் போக்குவரத்து வசதிகளிற்காக சுற்றுப்பயணத்திற்கு முன்னர் ரூபா 2,514,488 எகிப்திலுள்ள இலங்கை தூதுவர் அலுவலகத்திற்கு செலுத்தப்பட்டிருக்கையில் 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 01/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக சுற்றுப் பயணத்தில் பங்குபற்றியிருந்த ஆலோசனைச் சபை அங்கத்தவர்களிற்கும் உத்தியோகத்தர்களிற்கும் இணைந்த மற்றும் அமைய படிகளாக ரூபா 1,196,345 செலுத்தப்பட்டிருந்தது.

## 5.7 விளைவற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தர உள்ளீடுகளிற்காக 2013 மற்றும் முன்னைய ஆண்டிற்காக கம்பஹா கல்வி வலயத்திலுள்ள பாடசாலைக்கும் களுத்துறை கல்வி வலயத்திலுள்ள பாடசாலைக்கும் வழங்கப்பட்டிருந்த பணத்திலிருந்து ரூபா 3,114,590 செலவிடப்படாதிருந்தமை காரணமாக 2013 திசெம்பர் 31 இல் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மொல்லிகொட ஆயுர்வேத வைத்தியசாலையில் 2012 மார்ச் 11 ஆந் திகதி திறந்து வைக்கப்பட்ட ரூபா 1,769,310 பெறுமதியுடைய எக்ஸ் கதிர் பிரிவு 2013 திசெம்பர் 04 ஆந் திகதி வரை ஆரம்பிக்கப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) 2013 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட ரூபா 3,955,765 பெறுமதியான ஒன்பது பேருந்துப் பயணிகள் கூடங்கள் 2014 யூன் 25 வரை குறித்த இடங்களில் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.8 இனங்காணப்பட்ட இழப்புகளும் நட்டங்களும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) களனி கல்வி வலயத்திலுள்ள 34 ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை பாடசாலைகளில் ஆதனங்கள் களவாடப்பட்டமை காரணமாக ரூபா 2,243,948 நட்டங்களும் சேதங்களும் அறிவிக்கப்பட்டிருந்தன. இந்த நட்டங்கள் மற்றும் சேதங்களிலிருந்து ரூபா 2,181,060 தொகை 1 – 10 ஆண்டுகால வீச்சுக்கும் ரூபா 62,888 தொகை 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலத்திற்கும் உரித்தாக காணப்பட்டதுடன் இது தொடர்பில் நிதிப்பிரமாணம் / மாகாண நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் மந்த நிலையில் காணப்பட்டது.

(ஆ) கம்பஹ பொது வைத்தியசாலையின் மருந்துக் களஞ்சியத்தில் 2013 திசெம்பர் இறுதியளவில் ரூபா 917,845 பெறுமதியான 16 வகையினைச் சேர்ந்த 196,503 மருந்துகள் காலாவதியானவை எனவும் ரூபா 2,409,305 பெறுமதியான 17 வகையினைச் சேர்ந்த 20,554 மருந்துகள் தரமற்ற மருந்துகள் எனவும் இனங்காணப்பட்டிருந்தமை காரணமாக ரூபா 3,327,150 மொத்தமான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(இ) மாகாண வீதிகள் அபிவிருத்தி அதிகாரசபையினால் 1990 ஆம் ஆண்டில் தனியார் வங்கியொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 453,009,391 தொகை குறித்த வங்கி மூடப்பட்டிருந்தமை காரணமாக அதிகாரசபைக்கு மீளப் பெறமுடியாது போயிருந்ததுடன் பணத் தொகை இதுவரை ஐந்தொகையில் நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் முதலீடுகள் எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**5.9 ஒப்பந்த நிர்வாகம்**

கம்பஹா மாவட்ட வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைபெறும் நோயாளர் வார்ட்களிற்காக ரூபா 450 மில்லியன் செலவிடப்பட்டு 2000 ஆம் ஆண்டில் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்த 08 மாடிகள் கொண்ட கட்டிடத்தின் ஒவ்வொரு மாடியினதும் கழிவறைகள் / குளியலறைகளினது கழிவு நீர் கொங்ரீட் தட்டின் ஊடாக (Slab) கட்டிடத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கசிவதற்கு ஆரம்பித்தமையால் கட்டிடத்தின் உட்பகுதியில் பாதுகாப்பற்ற நிலை தோன்றியிருப்பதனை அவதானிக்க முடிந்தது.

**5.10 நோக்கங்களிற்கு முரணான செயற்திட்டங்கள்**

''விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகள், விவசாய உற்பத்திப்பொருள் விற்பனை மேம்படுத்தல்கள், கமத்தொழில் அபிவிருத்திக்காக நடவடிக்கைகளை எடுத்தல், சிறிய மற்றும் நடுத்தரளவு கைத்தொழில் மேம்படுத்தலுக்கான செயற்திட்டங்களை திட்டமிடுதல், தொழில் பயிற்சி நிறுவனத்தின் ஊடாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் அபிவிருத்தியும் பேணுதலும் மற்றும் சுற்றாடல் நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்கான செயற்திட்டங்களை திட்டமிட்டு அமுல்படுத்துதல்'' என்பன விவசாய, கமத்தொழில் அபிவிருத்தி, சிற்றளவு நீர்ப்பாசன, கைத்ததொழில் மற்றும் சுற்றாடல் அமைச்சின் பிரதான கருமங்களாக காணப்பட்ட போதிலும், அதற்கு உரித்தற்ற ரூபா 87,205,450 பெறுமதியான 04 செயற்திட்டங்கள் 2013 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**5.11 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதிலுள்ள பலவீனங்கள்**

2013 ஆம் ஆண்டின் மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியத்தின் கீழ் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய 04 செயற்திட்டங்களிற்காக ரூபா 4 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி ஆணைக்குழுச் செயலாளரின் 2013 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய எவ்சீ/டபிள்யூபி/4/6/2013 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அபிவிருத்தி திட்டங்களைத் தயாரிக்கையில் 03 மாவட்டங்களிலும் கூட்டுறவுத் துறையின் அபிவிருத்தி மீது கவனம் செலுத்துதல் அத்தியாவசியமானது என சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும், கொழும்பு நகரத்தை அண்மித்த 05 நகரங்களில் மாத்திரம் செயற்திட்டங்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தன.

(ஆ) தெரிவுசெய்யப்பட்ட வறுமையிலுள்ள குடும்பங்களின் வாழ்வாதார அபிவிருத்திக்காக ''மகரகம பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலக வளவிலுள்ள வாழ்வாதார எழுச்சி சந்தையின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்'' செயற்திட்டப் பெயர் ''மொறட்டுவ பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்குரிய மோல்பே கோப்சிரீ நாட் சந்தை உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி'' என மாற்றப்பட்டிருந்த போதிலும், இதற்காக நிதி ஆணைக்குழுவின ஒத்துசைவு கிடைத்திருக்கவில்லை. மேலும், இச் செயற்திட்டம் செயற்படுத்தப்படாது 2013 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 2 மில்லியன் காசோலை திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

(இ) பால் நுகர்வை பிரபல்யப்படுத்துவதற்கு வசதியளித்தலின் கீழ் 03 பால் விற்பனை நிலையங்களை ஒன்று ரூபா 350,000 மதிப்பீட்டின் கீழ் நிர்மாணிப்பதற்காக 2013 திசெம்பர் 22 ஆந் திகதி ரூபா 01 மில்லியன் தொகை வரை. கொழும்பு தெற்கு பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த விற்பனை நிலையங்களும் ஹோமாகம புகையிரத நிலையத்திற்கு அருகிலும், ருக்மல் கம வீட்டுத் தொகுதிக்கு அருகிலும், மாலபே பேரூந்து தரிப்பிடத்திற்கு அருகிலும் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், அந்த பால் விற்பனை நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள இடங்கள் மேல்மாகாண பயணிகள் போக்குவரத்து

அதிகாரசபைக்குச் சொந்தமானதாக காணப்பட்டமையால் பாற் சாலைகளை கூட்டுறவுச் சங்கங்களிற்கு கையளிப்பதற்கு முறையொன்று இல்லையெனக் குறிப்பிட்டு அவைகள் அந்த நிறுவனங்களிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன.

(ஈ) மகரகம பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான எகடொவத்த கிராமிய வங்கிக் கட்டிடத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்படாதிருந்ததுடன் வேலைகளை ஆரம்பிப்பதற்காக 20 சதவீத முற்பணம் மாத்திரம் வழங்கப்பட வேண்டிய போதிலும், மொத்த மதிப்பீடான ரூபா 1,250,000 தொகையில் ரூபா 500,000 வேலை ஆரம்பித்தல் முற்பணம் 2013 திசெம்பர் 20 ஆந் திகதி வரை. மகரகம பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் ரூபா 500,000 காசோலையொன்று 2013 திசெம்பர் 31 ஆந் திகதி எழுதப்பட்டிருந்ததுடன் இச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்காமையால் 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அக் காசோலை வைக்கப்பட்டிருந்தது.

**5.12 வாகன நிர்வாகம்**

-------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதான செயலாளரின் 2008/2009 வாகன திருத்தங்கள் விசேட செயற்திட்டத்தின் கீழ் முறையே ரூபா 1,104,500 மற்றும் ரூபா 1,537,600 செலவிடப்பட்டு திருத்தப்பட்டிருந்த கார் ஒன்றும் ஜீப் ஒன்றும் 2013 நவம்பர் 23 ஆந் திகதி முறையே ரூபா 400,000 இற்கும் ரூபா 900,000 இற்கும் மதிப்பிடப்பட்டு முறையே ரூபா 377,785 ஆகவும் ரூபா 932,000 ஆகவும் கேள்வி கோரல் மூலம் கைதவிர்ப்புச் செய்யப்பட்டிருந்தன.

(ஆ) 1990 ஆம் ஆண்டிலிருந்து மாகாண சபைக்கு முறைப்படியாக கையேற்கப்படாதிருந்த கெப் வாகனமொன்று பிரதான செயலாளரின் 2008/2009 வாகன திருத்தங்கள் விசேட செயற்திட்டத்தின் கீழ் ரூபா 2,014,000 செலவிடப்பட்டு திருத்தப்பட்டிருந்ததுடன் 42,970 கிலோமீற்றர்கள் பயணித்த பின்னர் 2013 செப்தெம்பர் மாத்தில் வாகனங்கள் கைதவிர்ப்புப் பட்டிலில் சேர்க்கப்பட்டு 2014 மார்ச் மாதத்தில் தொடர்புடைய வரிசை அமைச்சுக்கு மீளக் கையளிக்கப்பட்டிருந்தது.

(இ) மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வாகனப் பயன்பாடு தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) 2012 நவம்பர் 13 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க மேல் மாகாண தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்துப் பெறுகின்ற 05 உத்தியோகத்தர்களுக்கு 2011 முதல் 2014 மார்ச் வரை அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த எரிபொருள் எல்லையினை மீறி அங்கீகாரமின்றி ரூபா 7,869,440 பெறுமதியான எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது.

(ii) நிதிப்பிரமாணம் 1645 இலுள்ள ஏற்பாடுகளை தவறாக விளக்கம் கற்பித்து 12 உத்தியோகத்தர்களிற்கு 300 முதல் 450 வரையான எரிபொருள் எல்லைகளை அங்கீகரித்து வாகனங்களின் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்தன. இந்த முறையற்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொண்ட 22 உத்தியோகத்தர்கள் தமது வீடுகளிற்கு சென்று வருவதற்கும் தனிப்பட்ட நடவடிக்கைகளிற்காகவும் நாள்முழுவதும் அந்த வாகனங்களை பயன்படுத்தி வந்திருந்ததுடன் 2011 முதல் 2014 மார்ச் வரை வீடுகளிற்கு சென்று வருவதற்குப் பயன்படுத்தியிருந்த எரிபொருளின் பெறுமதி ரூபா 6,034,496 ஆகும்.

(iii) 2004 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 353(5) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் படி வாடகை அடிப்படையில் பெறப்படுகின்ற வாகனங்களிற்காக செலுத்தப்படக்கூடிய பெறுமதிசேர் வரி நீங்கலான மாதாந்த உச்ச வாடகைத் தொகை ரூபா 40,000 ஆன போதிலும், ரூபா 50,000 முதல் ரூபா 100,000 வரையான மாதாந்த வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட 13 வாகனங்களிற்காக 2011 முதல் 2014 ஏப்ரல் வரை ரூபா 795,000 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iv) குறைந்த எரிபொருள் வினைத்திறன்கொண்ட 05 வாகனங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமையால் அதிகாரசபைக்கு தாங்கிக் கொள்ளவேண்டியிருந்த மேலதிகக் கிரயம் ரூபா 1,029,600 ஆகும்.

**5.13 பதவியணி முகாமைத்துவம்**

**5.13.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

**(அ) மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்**

| | அங்கீகரிக்கப் பட்டது | உள்ளபடி யானது | வெற்றிடம் |
|---|---|---|---|
| நிறைவேற்றுத் தரம் | 2,245 | 2,213 | 32 |
| மூன்றாம் தரம் | 901 | 618 | 283 |
| இரண்டாம் தரம் | 10,027 | 7,795 | 2,232 |
| ஆரம்ப தரம் | 4,670 | 4,537 | 133 |
| மொத்தம் | 17,843 | 15,163 | 2,680 |

**(ஆ) பாடசாலைப் பதவியணியினர்**

| | அங்கீகரிக்கப் பட்டது | உள்ளபடி யானது | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| அதிபர்கள் | 1,732 | 1,692 | 40 | - |
| ஆசிரியர்கள் | 34,374 | 31,991 | 2,383 | - |
| சிற்றூழியர்கள் மற்றும் உதவியாளர்கள் | 1,051 | 2,455 | - | 1,404 |
| | 37,157 | 36,138 | 2,423 | 1,404 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாகாண சபையின் அமைச்சு மற்றும் திணைக்களங்களின் உயர் முகாமைத்துவ பதவிகளை உள்ளடக்கிய பல்வேறு பதவிகளில் சேவையாற்றி ஓய்வு பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களில் கருத்திற்கொள்ளக்கூடிய அளவில் ஆளுநர் அவர்களின்/ மாகாண அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஒப்பந்த அடிப்படையில் மீளச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் உயர் தரங்களிலுள்ள பதவி

வெற்றிடங்களுக்கு பதில் கடமை உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) மாகாண அமைச்சர்களிற்கு அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட பதவியணிக்கு மதியுரைஞர் பதவி உள்ளடக்கப்படாதிருக்கையில் மாகாண அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் ஆளுனரின் அங்கீகாரத்தின் மீது 2008 சனவரி முதல் 2013 சனவரி வரை அவ்வப்போது முதல் அமைச்சர் உள்ளிட்ட சகல அமைச்சர்களிற்கும் ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு ரூபா 30,000 வீதம் மாதாந்தப் படியும் எரிபொருள் படி, வாகனப் படி, தொலைபேசி படி போன்றன ஏனைய சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன.

(இ) மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்பந்த மற்றும் அமைய அடிப்படையின் கீழ் முறையே 271 மற்றும் 247 பேரும், கழிவு முகாமைத்துவ அதிகாரசபைக்கு 52 பேர், பொருளாதார மேம்பாட்டு பணியகத்திற்கு 34 பேர் மற்றும் தகவல் தொழில்நுட்ப வள அபிவிருத்தி நிறுவனத்திற்கு 06 பேர் ஒப்பந்த அடிப்படையின் கீழ் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் விண்ணப்பங்களை கோருதல் செய்தித்தாள் அறிவித்தலின் படி குறைந்தபட்ச தகைமைகளைக் கொண்டிராத ஒருவர் கழிவு முகாமைத்துவ அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் (மனித வளங்கள்) பதவிக்கு 2013 நவம்பர் 01 ஆந் திகதி ஆடசேர்க்கப்பட்டிருந்தார்.

(உ) மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தர் மற்றும் உப அதிபர் பதவிகளிற்காக ஒரு உள்வாரி விண்ணப்பதாரி வீதம் நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்திருந்ததுடன் அந்த விண்ணப்பதாரிகள் குறித்த பதவிகளிற்காக தேவைப்படுகின்ற அடிப்படை தகைமைகளை கொண்டிருக்காமை நேர்முகப் பரீட்சை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியிருந்த உத்தியோகத்தர்களிற்கு பதவிகள் வழங்கப்பட்டிருந்தன.

(ஊ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்காக 2010 திசெம்பர் 31 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த 25 உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகள், 13 எனவும் 4 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் 16 எனவும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினைக் கொண்டு திருத்தியமைத்து மாகாண சபைகளின் பல்வேறு அலுவலகங்களிலும் பணிகளில் ஈடுபட்டுள்ள 08 முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களும் 04 புதிய உத்தியோகத்தர்களும் 2013 ஒக்தோபர் மாதத்தில் உள்ளக கணக்காய்வுப் பிரிவுக்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் இந்த நியமனங்கள் 2006 செப்தெம்பர் 27 ஆந் திகதி ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்டு தற்போது நடைமுறையிலுள்ள உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தின் 3.3 ஆம் பிரிவுக்கு முரணானதாக காணப்பட்டது. இவ்வாறு இணைப்புச் செய்யப்பட்டு எவ்வித பயிற்சிகளும் வழங்கப்படாத முகாமைத்துவ உதவியாளர்களுக்கும் உள்ளக கணக்காய்வாளர்களாக பணிபுரிகின்ற உத்தியோகத்தர்களிற்கும் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களின்றி மாகாண சபையின் பல்வேறு அலுவலகங்களிலும் கணக்காய்வுப் பணிகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அத்துடன், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஊழியர் கோப்பின் படி உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுத் தலைவரின் பதவிப்பெயர் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் எனக் காணப்பட வேண்டிய போதிலும், பணிப்பாளர் (உள்ளகக் கணக்காய்வு) எனப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**5.14 உள்ளூராட்சி அதிகாரசபைகளின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் ஒன்பதாவது பட்டோலையின் 4.2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம்

உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிர்வாகத்தை மேற்பார்வை செய்வதற்கு மாகாண சபைக்குக் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் மேற்பார்வைக்காக முறையான வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. உள்ளூராட்சி அதிகாரசபைக் கணக்குகளின் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் உள்ளூராட்சி அதிகாரசபை நலனாளிகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. மேலும் உள்ளூராட்சி அதிகாரசபைக் கணக்குகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு அபிப்பிராயம் மறுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் தொடர்பாக மீளாய்வாண்டை உள்ளடக்கிய அண்மைய 04 ஆண்டுகளின் தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **ஆண்டு** | **கணக்காய்வு செய்யப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகளின் (நிதிக்கூற்றுக்கள்) எண்ணிக்கை** | **கணக்காய்வு அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகளின் (நிதிக்கூற்றுக்களின்) எண்ணிக்கை** | **பாதகமான அபிப்பிராயம் வழங்கப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகளின் (நிதிக்கூற்றுக்களின்) எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 2009 | 48 | 22 | - |
| 2010 | 48 | 13 | - |
| 2011 | 48 | 20 | - |
| 2012 | 48 | 26 | - |
| 2013 | 48 | 03 | 26 |

(ஆ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 48 உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிலுவை வருமானம் ரூபா 4,176,603,708 ஆக இருந்தது.

(இ) 12 உள்ளூராட்சி அதிகாரசபைகளின் உத்தியோகத்தர்கள்/ ஏனையோருக்கு எதிராக கணக்காய்வாளர் தலைமையதிபதியால் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களின் படி 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடுவதற்கிருந்த மிகைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 31,248,292 ஆக இருந்தது.

(ஈ) உள்ளூராட்சி அதிகாரசபைகளில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6 கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

மாகாண சபையின் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.2 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக 16 மாகாண சபை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்காக கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.3 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினை சபையில் சமர்ப்பித்தல்

1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி கடந்த ஆண்டுகளில் மேல்மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிலை பின்வருமாறாகக் காணப்பட்டது.

| ஆண்டு | அறிக்கை வழங்கப்பட்ட திகதி | அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 2008 | 2009.12.10 | 2010.02.09 |
| 2009 | 2010.10.26 | 2013.01.08 |
| 2010 | 2012.01.16 | 2012.05.22 |
| 2011 | 2013.02.28 | 2013.12.03 |
| 2012 | 2014.08.27 | சமர்ப்பிக்கப்படவில்லை |

**6.4 வங்கிக் கணக்குகள்**

வங்கிக் கணக்குகளை பேணிச் செல்லல் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அமைச்சொன்றின் 02 நடைமுறைக் கணக்குகளிற்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் 1 – 2 மாதங்கள் தாமதிக்கப்பட்டிருந்தன.

(ஆ) நான்கு நிறுவனங்களின் 04 வங்கிக் கணக்குகளின் 06 மாதங்களிற்கு மேலாக தேறாதிருந்த வைப்புக்களின் பெறுமதி ரூபா 647,534 ஆகும்.

(இ) இரண்டு நிறுவனங்களின் 10 வங்கிக் கணக்குகளிற்குரிய கொடுப்பனவுகளிற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாது 06 மாதங்களைக் கடந்த ரூபா 669,075 மொத்தமான 100 காசோலைகள் தொடர்பில் நி.பி. 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிறுவனமொன்றின் 05 வங்கிக் கணக்குகளிற்குரிய இனங்காணப்படாத வரவு வைத்தல்கள் ரூபா 37,900 ஆகவும் இனங்காணப்படாத செலு வைத்தல்கள் ரூபா 233,665 ஆகவும் காணப்பட்டன.

(உ) நிறுவனமொன்றின் வங்கிக் கணக்கொன்றுக்குரிய ரூபா 208,051 பெறுமதியான 25 மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பில் நி.பி. 486 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) மாகாண சபை அபிவிருத்தித் திட்டம்
(ஈ) உள்ளகக் கணக்காய்வு
(உ) உள்ளூராட்சி அதிகாரசபைகளின் மேற்பார்வை
(ஊ) பதவியணியினர்